நாள்.29.01.2026

அசல் வழக்கு எண். 103/2017

பி.வா. சா. 1

பெயர். மாரியப்பன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் எந்த ஆண்டிலிருந்து சுப்பிரமணிய சுவாமி கோவிலில் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன் என்றால் 24.01.2024 தேதியிலிருந்து பணியாற்றி வருகிறேன். இந்து சமய அறநிலைய சட்டத்தின் படி அலுவலக செயல்பாடுகள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஆவணங்களை பற்றியும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். கட்டளை சொத்துக்கள் மற்றும் கோவில் சொத்துக்கள் எவை எவை என்பதும் எங்கள் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களில் துலங்கும் என்றால் சரிதான், 1 முதல் 15 பதிவேடு மற்றும் சொத்து பதிவேடு உள்ளது.

மேற்படி 1 முதல் 15 பதிவேடு பார்த்தால் தபசில் சொத்து அதில் உள்ளதா என துலங்கும் என்றால் சரிதான். மேற்படி பதிவேடு இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சொத்து விவரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது பதிவேடு தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் 3 வது குறிப்பிடப்பட்டுள்ள தோத்தாதிரி நாதர் சுவாமி கோவில் அன்னதான கட்டளையும் 6 ம் திருநாள் மண்டகப்படி நாங்குநேரி எனவும் சொத்தாக 11.42.5 ஹெக்டேர் நஞ்சை நிலங்களும் 80.70.5 ஹெக்டேர் 4 வது ஆதிநாத ஆழ்வார் கோவில் விடாயத்து மண்டகப்படி ஆழ்வார் திருநகரி நஞ்சை நிலமாக 5.27.5 ஹெக்டேர் புஞ்சை நிலமாக 4.47.5 ஹெக்டேர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி சொத்துக்களுக்கு உரிமையாளர் மண்டகப்படி மற்றும் கட்டளைதாரர்கள் என்றால் சரியல்ல. மேற்படி 3,4 சொத்துக்களுக்கு வாதியின் மூதாதையர்களை தொடர்ந்து வாதி தான் உரிமையாளர் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரைக்கு நான் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் காலத்தில் இருந்த வழக்கறிஞரும் தற்போது உள்ள வழக்கறிஞரும் வெவ்வேறு நபர்கள் என்றால் சரிதான்.

10 ம் பிரதிவாதிக்கும் 8 ம் பிரதிவாதியான எங்கள் கோவிலுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல, 10 ம் பிரதிவாதி கோவிலுக்கு கட்டளை செய்யும் உத்தரவு ஆணையரால் எங்களுக்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 10 ம் பிரதிவாதி கோவிலுக்கு தனியாக செயல்

அலுவலர் இருக்கிறார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்திற்கு தகவல் நான் சொன்னேன் என்றால் சரிதான். அதில் குறிப்பிடப்படும் சங்கதிகளை படித்து பார்த்தேன் என்றால் சரிதான்.

பட்டர்புரம் பண்னை குடும்பத்தை சேர்ந்த நபர்கள் யாரையாவது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர்கள் மேல் பண்னை கீழ் பண்னை என இரு குடும்பங்களாக உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர்கள் தான் கட்டளை செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பாரா 2 ல் பட்டர்புரம் கிராமத்தில் கீழ் பண்னை மேல் பண்னை என இரு குடும்பங்கள் வசித்து வந்தாகவும் வாதியின் கணவர் மேல் பண்னை குடும்பத்தை சார்ந்தவராகவும் வழக்கில் 1 முதல் 5 பிரதிவாதிகள் கீழ் பண்னை குடும்பத்தை சார்ந்தவராகவும் பிராது தபசில் சொத்துக்கள் மற்றும் கட்டளைகளை வாதியின் கணவரும் அவரது மூதாதையர்களும் பரம்பரை டிரஸ்டியாக இருந்து நிர்வாகம் செய்து பராமரித்து வந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது சுத்த பொய் என குறிப்பிடப்பட்டுள்ளது எதன் அடிப்படையில் என்றால் ஆவணத்தின் அடிப்படையில் சொல்கிறேன்.

அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. கொடி வழி ஜாபிதா தவறு என நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் கோவில் ஆவணத்தின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். அவ்வாறு எந்த ஆவணமும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல.

என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பாரா 4 ல் பட்டர்புரம் கிராமம் முத்து வடிவம்மாள் திருக்கோவில் பொறுப்பை 2004 ம் ஆண்டு 8 ம் எதிர்வாதியான வள்ளியூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலின் செயல் அலுவலரிடம் ஒப்படைத்தாக குறிப்பிட்டுள்ளேன் யார் ஒப்படைத்தார்கள் என்றால் திருவேங்கடம் என்பவர் ஒப்படைத்தார். மேற்படி திருவேங்கடம் தான் ஒப்படைத்தார் என என்னுடைய எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உதயமார்த்தாண்ட அன்னதான கட்டளைக்கும் எவ்வித தொடர்பும் இல்லாததால் வழக்கில் 10 ம் பிரதிவாதியை பொறுத்து வழக்கு தள்ளுப்படி செய்ய சொல்வதற்கு எனக்கு எந்த சட்ட அறுகதையும் கிடையாது என்றால் சரியல்ல.

பட்டர்புரம் அருள்மிகு முத்து வடிவம்மாள் திருக்கோவில் நிர்வாகத்தோடு மனுவில் குறிப்பிட்டுள்ள இதர கட்டளைகளை தொடர்ப்பு படுத்துவதன் மூலம் மேற்படி கட்டளை சொத்துக்களை அபகரிக்கும்

நோக்கத்தோடு போலியான உரிமை மூலத்தை உருவாக்க மனுதாரர்கள் முயற்சி செய்தார் என குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல. பாரா 3 ல் பட்டர்புரம் அருள்மிகு முத்து வடிவம்மாள் திருக்கோவில் அமைந்துள்ளதாகவும் மேற்படி திருக்கோவிலினை வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் குடும்பத்தை சார்ந்தவர்கள் தான் ஆதி முதல் இன்று வரை நிர்வாகம் செய்து பராமரித்து வந்ததாக பொய்யாக சொல்லுகிறார்கள் என்றால் சரியல்ல. அதே போல் பட்டர்புரம் பண்னை குடும்ப கட்டளை நீண்ட காலமாக நல்ல முறையில் நடந்து வந்ததாகவும் அந்த கட்டளையின் பரம்பரை டிரஸ்டி என வாதியின் கணவரும் அவரது மூதாதையர்களும் கட்டளையின் மூலம் தோத்தாதிரி நாதர் திருக்கோவில் அன்னதான கட்டளை சித்திரை 6 ம் திருநாள் மண்டகப்படியும் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய கோவில் உதயமார்த்தாண்ட அன்னதான கட்டளையும் , களக்காட்டில் கோவில் உள்ள அருள்மிகு கோமதியம்மாள் அன்னதான சத்திரத்தையும் தை அம்மாவாசை பூஜையையும் இந்த வாதியின் மூதாதையர்கள் சிறப்பாக செய்து வந்ததாக சொல்லப்பட்டுள்ளது பொய் என்றால் சரிதான்.

10 ம் பிரதிவாதிக்கும் அவர்கள் செய்து வருகிற திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி உதயமார்த்தாண்ட அன்னதான கட்டளைக்கும் எவ்வித தொடர்ப்பும் கிடையாது என நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. முத்து வடிவம்மாள் திருக்கோவில் பொறுப்பு பி.டி.திருவேங்கடம் என்பவர் ஒப்படைத்தாகவும் நான் சொல்வது பொய் என்றாலும் அவருக்கு ஒப்படைக்க உரிமை எதுவும் கிடையாது என்றாலும் சரியல்ல. பி.டி திருவேங்கடம் என்பவர் அவருக்கு பாத்தியப்படாத கட்டளை சொத்துக்களையும் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் எங்களிடம் தவறாக ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல.

வாதியின் மூதாதையரான பி.கே. திருவேங்கடம் என்பவர் தான் தபசில் சொத்துக்களின் உண்மையான கட்டளைதாரர் என்னிடம் ஒப்படைப்பு செய்த பி.டி. திருவேங்கடம் என்பவர் இல்லை என்றாலும் சரியல்ல. சமூக நீதிமன்றம் இவ்வழக்கு விசாரிக்க அதிகாரம் இல்லை என நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு காலவரையறை தோசத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.